MCOP. 74/ 2023- PW1 .

திரு. நாகராஜ் , த/பெ.சின்னப்பா

நாள்:14.10.2025.

குறுக்கு விசாரணை 2 வது எதிர் மனுதாரர் தரப்பில் :

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எல்லாம் தெரிந்து தான் கையெழுத்து செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். விபத்து நடந்த தேதி 05.10.2022 என்றால் சரிதான். நான் யாருடன் எங்கிருந்து எங்கே சென்றேன் என்றால் அகொண்டப்பள்ளியில் இருந்து ஓசூர் நோக்கி சென்றோம். Scooty வண்டியில் மூவர் சென்றோம். நவீன் என்பவர் வண்டியை ஓட்டி சென்றார். என்னுடன் வந்தவர் மற்றொருவர் பெயர் ஞாபகம் இல்லை. வண்டியை ஓட்டி சென்றவருக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 20 வயது இருக்கும். நவீனுக்கு பின்னாடி மற்றொருவர் உட்காந்து இருந்தார். அவருக்கு பின்னாடி நான் 3 வது நபராக உட்கார்ந்து சென்றேன். நவீனுக்கு பின்னால் உட்கார்ந்திருந்தவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 21 வயது இருக்கும். இருசக்கரவாகனத்தில் இருவர் தான் பயணம் செய்யவேண்டும் என்றும் இருவக்கு மேல் பயணம் செய்தால் அது மோட்டார் வாகனசட்டப்படி குற்றம் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனது மனுவிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் என்னுடன் பயணம் செய்தவர்கள் பெயர் சூர்யா மற்றும் லட்சுமிபதி என்று சொல்லியிருப்பது சரியா என்றால் சரிதான். எனது மனுவில் லட்சுமிபதி தான் இருசக்கரவாகனத்தை ஓட்டிசென்றதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் நான் தான் வாகனத்தை ஓட்டி சென்றதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் மூவரும் விபத்து அன்று என்ன வேலைக்கு சென்றோம் என்றால் ரோஜாகட்டு அறுப்பதற்கு கூலி வேலைக்கு சென்றோம். மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் மேளம் அடிக்க வேலைக்கு சென்றாதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். விபத்தின் போது நாங்கள் மூவரும் தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டி சென்ற லட்சுமிபதி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வாகனத்திற்கு ICICI Lambourd மோட்டார் வாகனஇன்சூரன்ஸ்ல் இன்சூரன்ஸ் செய்திருப்பது தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் மூவரும் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றதால் எங்கள் வாகனத்தை ஓட்டி சென்றவருக்கு பேலன்ஸ் இல்லமால் எதிரே வந்த இன்னோவா கார்மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எங்களுக்கு பின்னால் வந்த TVS Wego என்ற இருசக்கர வாகனம் எங்களது வாகனத்தின் மீது மோதியது என்றால் சரிதான். அந்த விபத்தில் யார்யாருக்கு காயம் ஏற்பட்டது என்றால் என்னுடன் வந்த இரு நபர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டது. எனக்கு வலது காலில் முட்டிற்கு கீழ் காயம் ஏற்பட்டது. எங்கள் வாகனத்தின் பின்னால் வந்து மோதிய TVS Wego ஓட்டி வந்தவருக்கு தலையில் அடிப்பட்டிருந்தது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது வயது 19 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது சரியா என்றால் அது தவறு. விபத்தின் போது எனக்கு

வயது சுமார் 55 இருக்கும். விபத்து நடந்த உடன் நான் ஓசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அதன் பிறகு அனந்த ஆசிரமம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அங்கு 5 மற்றும் 6 ஆகிய இரண்டு நாட்கள் மட்டும் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்கள் சரியான பின்பு நான் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். அதற்கு பின்பு நான் சிகிச்சைக்காக மருத்துவமனை செல்லவில்லை என்றால் சரிதான். நான் மேளம் வாசிக்க செல்லும் வேலை செய்து வருகிறேன் என்றும் அதில் எனக்கு மிக குறைந்த சம்பளம் தான் கிடைக்கும் என்றும் நான் இழப்பீடு அதிகமாக பெறவேண்டும் என்பதற்காக எனது வருமானத்தை உயர்த்தி அதிகமாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எப்போதாவது தான் வேலை வாய்ப்பு கிடைக்கும். இருசக்கர வாகனத்தில் 3வதாக உட்கார்ந்து சென்று அடிப்பட்ட நபருக்கு மோட்டார் வாகனவிபத்து வழக்கு தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றும், பின்னால் உட்கார்ந்த செல்லும் ஒரு நபர் மட்டும் தான் இழப்பீடு கோரமுடியும் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற லட்சுமிபதி யின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டிருப்பதால் அந்த இருசக்கர வாகனத்தை காப்பீடு செய்துள்ள நிருவனதில் தான் நான் இழப்பீடு கேட்டகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் எனக்கு வருமான இழப்போ, நிறந்தர ஊனமோ, செயல் திறன் குறைபாடோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. **2** வது எதிர்மனுதாரருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம்இல்லை என்றும், நான் சென்ற இருசக்கரவாகனத்தின் இன்சூரன்ஸ் நிருவனத்தில் தான் நான் இழப்பீடு கேட்கவேண்டும் என்றும், நான் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.